# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 08.07.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 21683/விசாரணை/E/2023**

திரு அ.பிலால் அஹமத் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ -- பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
திருவெறும்பூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 12.03.2025 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து திருவெறும்பூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி பெ.பாக்கியலட்சுமி இவ்வாணையத்தில் 15.05.2025 அன்று ஆஜராகி திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கையை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2) அந்த அறிக்கையில், மனுதாரர் 26.06.2023 அன்று அனுப்பியுள்ள 6(1) மனு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் இணைய வழி முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அந்த முகவரிக்கு அனுப்பப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுக்களை பார்வையிடுவதற்கான User ID மற்றும் Password, சென்னை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை நிருவாக ஆணையர் (சபாதி) அவர்களால் 04.07.2024 அன்று தான் வழங்கப்பட்டன என்றும், அதன் பின்னர்தான் மனுதாரரின் மனு திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், பொதுத் தகவல் அலுவலர் பதில் வழங்க வேண்டுமென்றே காலதாமதம் செய்யவில்லை என்றும் தெரிவித்து, ஆகவே, 03.03.2023 முதல் 01.08.2023 வரையிலான காலங்களில் திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அளித்த விளக்கத்தினை ஏற்று அவர் மீதான மேல்நடவடிக்கையை கைவிடலாம் என்று திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் பரிந்துரைத்துள்ளார்.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த இவ்வாணையம், கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியரின் பரிந்துரையை ஏற்று, திருவெறும்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 03.03.2023 முதல் 01.08.2023 வரையில் பணிபுரிந்த பொதுத் தகவல் அலுவலர் மீது மேல்நடவடிக்கையை கைவிடுகிறது.**

ii. **மனுதாரர் பட்டா திருத்தம் கோரி அளித்த மனுவின் மீது இறுதி முடிவெடுத்து அது குறித்த விவரங்களை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 28.08.2025 அன்று சமர்ப்பிக்க வேண்டுமென இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 21683/விசாரணை/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், திருவெறும்பூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

வருவாய் கோட்டாட்சியர்,
திருச்சிராப்பள்ளி வட்டம்

திரு அ.பிலால் அஹமத் த/பெ அப்பாஜான்
எண்.4/152, பிரதான சாலை,
தம்பை, தேவையூர் அஞ்சல்,
வேப்பந்தட்டை
பெரம்பலூர் - 621 115

Copy to File
CR/PA